
உ
சிவமயம்

# திருமுறைகளும் சிவநெறியும்

## (சைவத் தமிழ்ச் சிறுவர்க்கு)



"ஆட்பா ல்வர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகிலள வில்லைக் கிளக்க வேண்டா
கோட் பாலனவும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்று இவை கேட்கத் தக்கார"

திருஞானசம்பந்தர்

தொகுப்பு : திருமுறைக் கூட்டத்தார், விம்பிள்டன்
இலண்டன்

உ

சிவமயம்

# முன்னுரை

"கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும்ஏத்தித் தொழுவோம் யாமே"

இன்றைய காலப்போக்கைக் கருத்திற்கொண்டு சைவத் தமிழ்ச் சிறுவர்களின் நலன் கருதி திருமுறைகளும் சிவநெறியும் என்னும் இந்தத் திருமுறைத் தொகுப்பினை உங்கள் முன் வைக்கிறோம்.

இந்தத் தொகுப்பிலே திருமுறைகளும் சிவநெறியும், சிவாலய வழிபாடு, திருமுறையும் திருநீறும், திருமுறையும் திருவைந்தெழுத்தும் என்ற தலைப்புக்களில் விளக்கக் கட்டுரைகளுடன் பன்னிரு திருமுறைகளிலிருந்து சிறுவர்களுக்கு ஏற்றதாகத் தெரியப்பட்ட திருமுறைப்பாடல்களையும் சேர்த்துத் தொகுத்துள்ளோம். இத்தொகுப்பு சிறுவர்களின் சமய அறிவை வளர்க்கத் துணைபுரியும் என நம்புகிறோம்.

மேலும் இத்தொகுப்புக்குப் பயன் தரும் வகையில் அணிந்துரை தந்துதவிய சைவசித்தாந்த கலாநிதி க.கணேசலிங்கம் அவர்களுக்கு எமது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்புடன்,
திருமுறைக் கூட்டத்தார்.

உ

சிவமயம்

# அணிந்துரை

சைவசிந்தாந்த கலாநிதி
சித்தாந்தரத்தினம் க. கணேசலிங்கம் B.Sc.(Eng..)
C.Eng,M L E E (London), M.I.E(Cry)
ஆதீனப் புலவர் இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்.

திருமுறைகளும் சிவநெறியும் என்ற இச் சிறு நூல் சைவத் தமிழ்ச் சிறுவர்களுக்காக எழுதப்பட்டது. ஆயினும் வயது வந்தவருக்கும் பயன்படும் அரிய நூலாக இது விளங்குகிறது. இன்று சைவர்கள் பலரும் தமது சமய நெறியையும் சமயக் கொள்கையையும் அறியாதவர்களாக வாழ்கின்றனர். இவர்களை நெறிப்படுத்தத் துணைபுரியும் கருத்துக்கள் இந்நூலில் உள்ளன.

தமிழிலுள்ள திருமுறைகள் இறையருள் பெற்ற அருளாளர்களாலே பாடப்பெற்றவை. இறைவன் உள்நின்று உணர்த்த, வெளிவந்தவை அவை. அதனால் திருமுறைகளுக்குப் பெரும் ஆற்றலுண்டு. இதனை விளங்கிச் சைவர்கள் திருமுறைகளைப் போற்ற வேண்டிய அவசியத்தை இந்நூல் வலியுறுத்துகின்றது. மந்திரம் போல் அமைந்த திருமுறைப்பாடல்களை விடுத்து, பிற கவிதைகளை திருக்கோயில்களில் ஓதுவது தகாது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. தகுந்த காரணங்களுடன் இக் கருத்துக்கள் தரப்பட்டுள்ளமை இந்நூலுக்குப் பெருமை சேர்ப்பதாகவுள்ளது.

"இந்து சமயம்" என்ற சொல்லாட்சி அண்மைக்காலத்தில் வந்தது. இது இந்திய சமயங்களைக் குறிக்கும் பொதுவான சொற்றொடர் "சைவம் தனித்துவமான சமயம்" என்று குறிக்கப்பட்டுள்ளது. சரியானதே.

சைவநெறியும் அதன் தத்துவமான சைவசிந்தாந்தமும் உலக அறிஞர்களால் சிறந்தவையாகக் கருதிப் பாராட்டப்படுவன. தமது சமயத்தின் சிறப்பையும் பெருமையையும் அறியாமல் சைவர்கள் குழம்புகின்ற சூழ்நிலை இன்று உருவாகியுள்ளது. சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவசமயம். அம்பிகை, விநாயகர், முருகன், வைரவர், வீரபத்திரர் ஆகிய உருவங்களும் சிவமூர்த்தங்களும் சிவனின் வெவ்வேறு வடிவங்கள் அருளும் வகையால் அமைந்தவை. இவை தவிர வேறு வடிவங்களை வணங்குதல் பயனற்றவை, ஆன்மிக வளர்ச்சிக்குத் தடையாக அமைபவை. அருளாளர் வாக்கிலிருந்தும் வாழ்விலிருந்தும் இதனை அறியலாம். திருமுறைகள் தத்துவ நூல்களைச் சான்றாகக் காட்டி இது விளக்கப்பட்டுள்ளது.

சைவ ஆலயங்கள் சைவ ஆகம விதிப்படி அமைய வேண்டும். மேலை நாடுகளில் ஆகம விதிப்படி அவற்றை அமைப்பது பல வேளைகளில் இயலாததாக இருக்கிறது. ஆயினும் இயன்ற வரை முயல வேண்டும். இறை மூர்த்தங்கள், அவை எழுந்தருளும் முறைகள் ஆகியன சைவ ஆகமங்களின்படி அமையலாம். இவற்றைக்கூறி திருக்கோயிலில் வழிபடவேண்டிய முறைகள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

திருநீறும் திருவைந்தெழுத்தும் சைவத்தில் இன்றியமையாத சாதனங்கள். திருவைந்தெழுத்து என்னும் பஞ்சாட்சர மந்திரம் மந்திரங்களில் எல்லாம் மேலான மந்திரம். இம் மந்திரத்தை ஓதி நாயன்மார்கள் பல அற்புதங்கள் செய்திருக்கின்றனர். மந்திரம் என்றால் நினைப்பவரை அல்லது உச்சரிப்பவரைக் காப்பது என்பது பொருள். திருவைந்தெழுத்தைத் தினம் ஓதினால் அது எம்மைக் காத்து இறைநிலை கூட்டுகிறது. "படைக்கலமாக உன் நாமத்து எழுத்தைந் தென்நாவிற் கொண்டேன்" என்று நாவுக்கரசர் கூறுகிறார்.

திருவைந்தெழுத்தைப் போல திருநீற்றுக்கும் ஆற்றலுண்டு. திருநீற்றின் மகிமையால் தீராத நோய்கள் தீர்த்தும் வேறு அற்புதங்கள் செய்தும் சைவத்தின் பெருமையை உலகுக்கு உணர்த்தியவர்கள் சைவ அருளாளர்கள். அவர்கள் செய்த அற்புதங்களுக்கு அடிப்படையாக அமைந்தவை திருவைந்தெழுத்து, திருநீறு, அவர்கள் பாடிய தமிழ்த் திருமுறைகள், இவற்றுக்கு மேலாக இறைவனிடமுள்ள அசையாத இறை பக்தியும் நம்பிக்கையும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தன.

இறைவன் உள்ளிருந்து உணர்த்த வெளிவந்த திருமுறைகளை திருநெறிய தமிழ் சம்பந்தன தமிழ் என்று பலவாறாக ஞானசம்பந்தப்பெருமான் கூறுகிறார். இத்தமிழால் அவர்கள் செய்த அற்புதங்கள் பல. வடமொழிச் சுலோகங்களால் எந்த அற்புதமும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. இத்தகைய ஆற்றல்மிக்க திருமுறைகள் சிலவற்றைத் தொகுத்து இநநூலில் இணைத்திருப்பது மிகவும் பயனுள்ளது. இத்தொகுதியில் உள்ளவை சைவத்தின் மேலான கொள்கையான உலக நலன் பேணல், சிவத்தின் சிறப்பு, அருளென்னும் திருவடி போன்ற பல செய்திகளின் விளக்கமாகவும் அமைத்துத் தந்திருப்பது மேலும் பயனுள்ளது. இறை வழிபாட்டில் அர்ச்சனை முக்கிய இடம்பெறுவது. பொருள் உணர்ந்து அர்ச்சனை செய்யக்கூடிய வகையில் தமிழ் அர்ச்சனை என்ற பகுதியும் இணைக்கப்பட்டுள்ளது. தமிழ் அர்ச்சனைக்கு சைவ ஆகமங்களில் இடமுண்டு என்பதைப் பலர் அறிவதில்லை. திருமுறைத் தமிழின் அடிப்படையில் தமிழ் அர்ச்சனைக்குரிய தொடர்கள் ஆக்கப்பட்டுள்ளன. இவை சைவமக்களால் பின்பற்ற வேண்டிய முக்கியம் வாய்ந்தவை. இந்நூலை ஆக்கி அளித்த விம்பிள்டன் திருமுறைக்கூட்டத்தார் சைவத்துக்கும் தமிழுக்கும் அரிய பணி செய்துள்ளனர். அவர்கள் பணி மேலும்தொடர இறைவனை வேண்டுகிறேன்.

அன்பன்
க.கணேசலிங்கம்

# திருமுறைகளும் சிவநெறியும்

திருமுறைகள் தமிழ் மக்கள் சிவபெருமான் இடத்திலும், சிவாலயங்களிடத்திலும் கொண்டிருந்த அன்பையும் மதிப்பையுங் காட்டுகின்றன. திருமுறைகள் அவர்களுக்கு உண்மையான இன்ப வாழ்வை அளித்தன என்பதை எக்காலத்தும் மறக்கலாகாது. அவை, தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறியது போல

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் எனலாம்.

செம்பொருள் என்பது என்றும் மாறாத உண்மைப் பொருள். அதுவே நாம் வணங்கும் செம்பொருள் சிவம். அப்பொருளைக் கண்ட சிவஞானிகளாம் அருளாளர்கள் வாய்வழி வந்த அன்பு கலந்த பொய் இலாத இனியனவாய சொற்களால் ஆனவையே திருமுறைப்பாடல்கள். அப்பாடல்கள் திருநாரையூர் நம்பி முதலாகிய அருளாளர்களால் பன்னிரண்டு தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான திருப்பாடல்களைக் கொண்டவை. அருளாளர் வாயில் இசையோடு பிறந்த அவற்றை வெறும் துதிப் பாடல்களாக எண்ணலாகாது. நிறைமொழிமாந்தர் திருவாயில் மலர்ந்த மறைமொழியாக, மந்திர மொழியாகக் கொள்ள வேண்டும். சிவனே அருளாளர் சிந்தையுள் நின்று அவர்களைக் கருவியாகக் கொண்டு அருளிச் செய்தார் என்பதே உண்மை.

"அண்ணல் விளம்புவான் எனதுரை தனதுரையாக"
என ஞானசம்பந்தரும்,
"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை"

என மாணிக்க வாசகரும் பாடியிருப்பதிலிருந்து சிவனே அருளிச்செய்தார் என்ற உண்மையை உணரலாம். இவ்வகையான இறையருளால் வந்த பாடல்கள் இருக்க, இக்காலக் கவிஞர்கள் தெய்வங்களைப் பற்றிப் பாடிய பாடல்கள் பல, இசை அமைக்கப்பட்டு ஒலிப்பேழையில் பதிக்கப்பெற்றுக் கோயில்களிலே பாடப்படுகின்றன.

திருமுறை சாராத பாடல்கள் கூட்டுப்பிரார்த்தனையாகவும் பாடப்படுகின்றன. அவை திருமுறைகளைப் போலக் கருத்தாழமும் மந்திரசக்தியும் இல்லாதவை. பாடும்போது உள்ளத்திலே ஒரு வகையான கிளர்ச்சியைத் தரலாமே ஒழிய உடல், உள, ஆன்ம வளர்ச்சியை அளிப்பவை அல்ல. திருமுறைப் பாடல்களை அமைதியான ஓரிடத்திலிருந்து பாடும் போது உடல், உள, ஆன்ம விருத்தியின் பயனை உணரலாம். பாடல்கள் உரைப்பார், உரை உகப்பார் உள்ளங்களை நீராய் உருக்கும் என்பதையும் "கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போல" தித்திக்கும் என்பதையும் அறியலாம். மேலும் மண்ணில் நல்ல வாழ்வை அளிப்பதோடு மறுமையில் நல்ல கதியையும் தரும்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை"
என்பது ஞான சம்பந்தர் அருள் வாக்கு.

இவ்வாறு பிறவிப்பயனைத் தருவன திருமுறைப் பாடல்கள் என்பதை சைவத்தமிழ் மக்கள் அறிய வேண்டும். கோயில்களிலும் வீடுகளிலும் அவை ஓதப்படல் வேண்டும். திருமுறைகள் சிவநெறியையே மேலாகப் போற்றுகின்றன. சிவநெறியைப் போற்றும் சமயம் சைவசமயம். சைவம் தனித்துவமான சமயம். முன்னைப் பழம்பெருஞ் சமயம் அது. வேதகாலத்துக்கு முற்பட்டது. காலப்போக்கில் "இந்து" என்ற சமயக்கட்டுக்குள் சேர்க்கப்பட்டதால் தனது தனித்துவத்தை இழந்துவிட்டது எனலாம். சைவத்திலே சிவனும் சிவமூர்த்தங்களுமே வழிபாட்டுக்கு உரியவர்களாய் இருக்க சிலர் பிறதெய்வங்களையும் சிறு தெய்வங்களையும் வழிபடுகிறார்கள். அவ்வகை வழிபாட்டுக்கு வழிநடத்தவும்படுகிறார்கள். எல்லாம் சரியென்ற சமநெறியும் பேசுகிறார்கள். சைவத்தை இவர்கள் அறியாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும். சிவநெறிக்குப் புறம்பான பிறதெய்வ வழிபாட்டை மெய்யடியார்களும் விரும்பியதில்லை. இதனை,

"சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்
சிவனடியே சிந்திக்கப் பெற்றோம் நாமே"

என நாவுக்கரசரும்,

"கல்லால் நீழல் அல்லாத் தேவை
நல்லார் பேணார் அல்லோ நாமே"

என ஞானசம்பந்தரும்,

"சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"
என திருமூலரும் உரை செய்து உணர வைத்திருக்கிறார்கள்.

மேலும்,

"யாதொருதெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாத்தொரு பாக னார்தாம் வருவர்மற் றைத்தெய் வங்கள்
வேதனைப் படும்இறக்கும் பிறக்கும்மேல் வினையும் செய்யும்
ஆதலால் இவையி லாதான் அறிந்தருள் செய்வன் அன்றே"

எனச் சைவ சித்தாந்த நூலாகிய சிவஞான சித்தியாரில் அருள்நந்தி சிவனார் சிவனையும் சிறுதெய்வங்களையும் பற்றிக் கூறியிருப்பதை உற்றுணர்வோமாக. நாம் செய்த நல்வினையினால் சைவர்களாகப் பிறந்தோம். சிவனை வழிபடப் பெற்றோம். இதனை ஞானக்குழந்தையின் கீழ்வரும் திருப்பாட்டால் உணர்ந்து சிவநெறி தழுவி நடப்போமாக.

"என்னபுண்ணியஞ் செய்தனைநெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.

# சிவாலய வழிபாடு

ஆலய வழிபாட்டு வழிமுறைகளைக் கூறும் நூல்கள் சிவாகம முறைப்படி அமைந்த சிவாலய வழிபாட்டு நெறிகளையே கூறுகின்றன. எல்லா ஆலயங்களும் இப்படி அமைந்தவை அல்ல. சிறப்பாக, புலம்பெயர் நாடுகளில் ஆகமவிதிகளுக்கு அமைய ஆலயங்களை அமைப்பது அரிய காரியமாகும். அதனால் வழிபாட்டு முறைகளையும் நாம் முழுமையாகப் பின்பற்ற முடியாது. எனவே காலத்துக்கும் இடத்துக்கும் பொஃருந்த, கூடியவரை வரைமுறைகளைக் கையாள்வது சாலச் சிறந்தது.

ஆலயத்தை அரனின் தூல வடிவாக மனதிற்கொண்டு வழிபட வேண்டும். அதன் தூய்மையையும் பேணிக்கொள்ள வேண்டும். வழிபடப் போவோர் நீராடி, தூய உடையை உடுத்து, திருநீறு அணிந்து புறந்தூயராயும், மனம் மொழிகளால் அகந்தூயராயும் போகவேண்டும். போகும்போது பூசைக்கு வேண்டிய பொருள்களை எடுத்துப் போவது உத்தமம். போனதும் புறத்தே இருக்கும் நீர்நிலையிற் கால்கழுவி, வாய் கொப்பளித்து, கோபுரத்தை வணங்கி இறை சிந்தையோடு உள்ளே போகவேண்டும்.

ஆலயத்தினுள் முதலில் பலிபீடத்தையும் கொடிமரத்தையும் இடப தேவரையும் வணங்க வேண்டும். பின் பலிபீடத்துக்கு இப்பால் கொடிமரத்துக்கு முன்னால் வடக்கு அல்லது மேற்கு நோக்கிய சந்நிதானத்திலே இடப் பக்கத்திலும் கிழக்கு அல்லது தெற்கு நோக்கிய சந்நிதானத்திலே வலப் பக்கத்திலும் ஆண்கள் எட்டு உறுப்புக்கள் நிலத்திலே படவும் பெண்கள் ஐந்து உறுப்புக்கள் நிலத்திலே படவும் வீழ்ந்து வணங்க வேண்டும். வீழ்ந்து வணங்குதல் என்பது இறைவனின் திருவடியிலே தலையை வைத்து, 'தாள்' சேர்தலாகிய உயர்ந்த தத்துவத்தை நினைவுபடுத்துகிறது. இறைவனின் தாளிலே தலை முட்டும்போது எமது அகந்தை அழிகின்றது. இறைவனின் திருத்தாள் அவனின் அருளைக் குறிப்பது. இந்த வணக்கத்தை மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும் பண்ணவேண்டும். மேற்கூறிய முறையன்றி கண்டபடி வீழ்ந்து வணங்குதல் ஆகாது.

எட்டு உறுப்புக்களால் வணங்குதல் என்பது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு ஆகிய எட்டு உறுப்புகளும் தரையிலே பட வணங்குதல். பூமியிலே தலையை வைத்து மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும் இடதுகையைப் பின்னும் நேரே நீட்டி, பின் அம்முறையே மடக்கி வலப்புயமும், இடப்புயமும் பூமியிலே பொருந்தும்படி கைகளை இடுப்பு நோக்கி நீட்டி, பின் வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் பூமியிற் பொருந்த வணங்க வேண்டும். ஐந்து உறுப்புக்களால் வணங்குதல் என்பது தலை, கைஇரண்டு, முழந்தாள் இரண்டு ஆகிய ஐந்து உறுப்புக்களுமே தரையிலே பொருந்த வணங்குதல். இப்படி வணங்கிய பின் ஆலயத்தை வலம் வருதல் வேண்டும். வலம் வரும்போது இரண்டு கைகளையும் சிரசிலே அல்லது மார்பிலே குவித்து, சிவ நாமங்களை உச்சரித்துக் கொண்டு கால்களை மெல்லவைத்து வலம் வரவேண்டும். வலம் வருதல் மூன்று, ஐந்து, ஏழு அல்லது ஒன்பது முறை செய்ய வேண்டும். விநாயகரை ஒருதரமும் அம்பாளை நாலுதரமும் வணங்கலாம். சுவாமிக்கு திருமஞ்சனம் (நீராட்டுதல்) செய்யும்போது வணங்குதலோ, வலம் வருதலோ செய்தலாகாது. முக்கியமாக உள்வீதியில் வலம் வருதல் ஆகாது. வலம் வருதலை முடித்துக்கொண்டு முதலிலே துவாரபாலகரையும் பின் திருநந்தி தேவரையும் வணங்கி உள்ளே போய்ப் பிள்ளையாரை வணங்கிய பின் சிவலிங்கத்தையும் உமாதேவியாரையும் வணங்க வேண்டும். பின் அர்ச்சனை செய்வித்து, திருநீறு வாங்கித் தரித்துக்கொள்ள வேண்டும். அதன்பின் சபாபதி, தட்சணாமூர்த்தி, சுப்பிரமணியர் முதலான மூர்த்திகளையும் சமய குரவர்களையும் வணங்கித் தரிசனம் செய்தல்வேண்டும். பின் வலப்புறமாகச் சென்று சண்டேசுரர் சந்நிதியை அடைந்து கும்பிட்டு, தோத்திரம் செய்து மூன்று முறை கைதட்டி, சிவதரிசன பலனைத் தருமாறு வணங்கி வலமாக வந்து மீண்டும் சிவலிங்கத்தை தரிசித்து பலிபீடத்துக்கு இப்பால் வீழ்ந்து வணங்கி எழுந்து திருவைந்தெழுத்தை நூறு முறை ஓதி வீடு செல்ல வேண்டும். இவ்வாறு நம் புற உறுப்புக்களையும் அக உறுப்புக்களையும் இறைவழிபாட்டிலே பயன்படுத்துவோமானால் பிறவிப்பயனைப் பெற்றவர்கள் ஆவோம்.

"ஆக்கையாற் பயனென் அரன் கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப்போற்றி என்னாத இவ்-
ஆக்கையாற் பயனென்"

என்பது நம் பெருமான் நாவுக்கரசர் தந்த மறைமொழியாகும். இதன் வழி ஒழுகுவோமாக.

## திருமுறையும் திருநீறும்

சைவ மக்கள்பேணி அணிய வேண்டிய சிவசின்னம் திருநீறு.
"பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு".
என்பது ஞானசம்பந்தர் அருள்வாக்கு. அவர் வாக்குக்கு மதிப்பளித்து திருநீற்றினைச் சிந்தாமல் அணிவோம்.

ஒருபொருள் நெருப்பில் எரிந்தபின் எரியாது எஞ்சியிருப்பது நீறு. அதற்கு மேல் மாற்றம் பெறுவதில்லை. அந்த நீறு போல உலகம் ஊழி முடிவில் அழிந்து போக அழியாது இருப்பவன் இறைவன் ஒருவனே என விளக்குவது நீறு. நீற்றில் விளங்கும் வெண்ணிற ஒளி திருவருளைக் காட்டுகின்றது. திருநீறு வாழ்வு நிலையாமையையும் உணர்த்துகின்றது. சிவசக்தியின் அடையாளமாக விளங்குவது நீறு. இத்திருநீற்றை பசுவின் சாணத்தை எரித்து நீறாக்கிப் பெறலாம் என நூல்கள் சொல்லுகின்றன. மேலும் திருமந்திரத்திலே சொல்லியவாறு ஓமகுண்டத்திலே சிவாக்கினியிலே எரிந்து நீறாகிய ஆல், அத்தி, அரசாதிகளின் சமித்துச் சாம்பலையும் திருநீறாகத் தரிக்கலாம். திருநீற்றின் மகிமையைச் சிவனடியார்கள் அறிவார்கள். ஆதனால் அவர்கள் மங்காமற் பூசிமகிழ்வார்கள். சிவனும் திருநீறு பூசியவராய் விளங்குகிறார். திருமுறைகளில் அவர் நீறு பூசிய திருக்கோலத்தை "உருவளர் பவளமேனி ஒளிநீறணிந்து" என்றும் "பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்" என்றும் "நீறு சேர்வதோர் மேனியர்" என்றும் "நீறு சண்ணித்த மேனியர்" என்றும் பாடிப் பரவியிருப்பதைப் பார்க்கலாம். உயிர் உய்வதற்குக் கவசமாய் இருப்பது திருநீறு. அதனை உணர்த்தவே சிவபெருமான் திருநீற்றைக் கவசமாக

அணிந்திருக்கிறார். திருநீறு தரிப்பவரை மந்திரமாக நின்று காக்கும். அதற்கு மகிமைகள் பல உள. திருவானைக்காவில் திருக்கோயில் ஐந்தாவது மதிற்சுவரைக் கட்டிய கூலியாட்களுக்கு சித்தராக வந்த சிவபெருமான் திருநீற்றைக் கூலியாக வழங்கினார். அது பொன்னாக மாறி அவர்கள் பசிப்பிணியைப் போக்க உதவியது. இந்த வரலாறு அக்கோயில் மதிற்சுவரில். எழுதப்பட்டிருப்பதை இன்றும் பார்க்கலாம் ஆதிசங்கரருக்கு தீராவினையால் வந்த வயிற்று நோயை திருச்செந்தூர் முருகன் பன்னீரிலைத் திருநீறு நீக்கியதாக அறிகிறோம். இன்றும் இந்தியாவின் ஒரு பகுதியில் வாழும் ஒரு மக்கள் கூட்டத்தினர் நோய் வரும்போது திருநீற்றை மருந்தாக கொள்வதாக செய்திகள் வாயிலாக அறிகிறோம். தீராநோயுடன் சென்ற மருணீக்கியாருக்கு அவர் தமக்கையாராகிய திலகவதியார் நோய்நிவாரணமாக அவருக்குக் கொடுத்தது ஐந்தெழுத்து ஓதிய திருநீறாகும். மங்கயற்கரசியாரின் அழைப்பை ஏற்று வந்து திருமடத்திலே தங்கியிருந்த திருஞானசம்பந்தரையும் அடியார்களையும் கொல்லும்பொருட்டு அரசன் அனுசரணையுடன் சமணர் திருமடத்துக்குத் தீ வைத்தனர். அதையறிந்த அருட்செல்வர் தீ பரவாதிருக்கவும், தீயின் வெப்பம் பாண்டியனைச் சேரவும் வேண்டி ஆலவாயரனிடம் முறைசெய்து

"செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொழு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியர்க் காகவே"

எனப் பாடி நின்றார். தீயும் அணைந்தது அதன் வெப்பம் பாண்டியனை மெல்லச் சென்றடைந்தது. பாண்டியனின் உடலில் சுரநோய் தோன்றியது. சமணர்கள் அழைக்கப்பட்டார்கள். நோயைப் போக்க அவர்கள் மருந்து மந்திரங்களைக் கையாண்டார்கள். மயிற்பீலியினாற் தடவினார்கள். நோய் நீங்கவில்லை. இந்த நிலையில் திருமடத்திலிருந்த ஞானச்செல்வரை மங்கயற்கரசியார் அழைத்து வந்தார். அவரைக் கண்ட சமணர்கள் கொதித்தெழுந்தனர். சுரவாதம் செய்ய அவரை அழைத்தனர். அரசன் உடல் நோயில் ஒரு பாதியைத் தாம் நீக்குவதாயும் மறுபாதியை

ஞானசம்பந்தர் நீக்க வேண்டும் என்றும் கேட்டனர். அதற்கு இசைந்த ஞானச்செல்வர் ஆலவாயரனைத் தொழுது.

"மந்திர மாவதுநீறு வானவர் மேலதுநீறு
சுந்தர மாவதுநீறு துதிக்கப் படுவதுநீறு
தந்திர மாவதுநீறு சமயத்திலுள் ளதுநீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவா யான்திரு நீறே".

என ஆரம்பித்து திருநீற்றின் மகிமையைப் பாடி மன்னன் உடலில் தமக்கு விடப்பட்ட பாகத்திலே திருநீற்றைப் பூசினார். அந்தப் பக்கத்திலே சுரநோய் நீங்கி சமணர் பக்கத்திலே அதிகரித்தது. சமணர் செய்வதறியாது கலங்கி நின்றனர். அவர்கள் பாகத்திலிருந்த நோயையும் திருநீறு பூசி அருட்செல்வர் நீக்கியருளினார். பின்னும் சமணர் அவரை அனல்வாதம், புனல்வாதத்திற்கு அழைத்து அவற்றிலும் தோல்வியுற்று அஞ்சி ஒதுங்கினர். இந்நிகழ்வால் பாண்டிநாட்டிலே பரவியிருந்த சமண இருள் அகன்றது. மன்னனும் மக்களும் சைவராயினர். திருநீற்றின் ஒளி விளங்கியது. இவ்வாறு மகிமைமிக்க திருநீற்றை அணியும்போது சங்கரனின் நாமமாகிய "நமச்சிவாய" எனும் மந்திரத்தைச் சொல்லி அணிய வேண்டும் அப்படி அணிவதால் விளையும் பயனை,

சந்திரற் சடையில் வைத்த சங்கரன் சாமவேதி
அந்தரத் தமரர் பெம்மான் ஆன்நல்வெள் ளூர்தி யான்றன்
மந்திரம் நமச்சிவாய ஆகநீ றணியப் பெற்றால்
வெந்தறும் வினையும்நோயும் வெவ்வழல் விறகிட்டன்றே

என நாவுக்கரசர் விளம்பியிருப்பதைப் பார்க்கிறோம். மேலும் திருமூலர் திருமந்திரத்தில்

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே".

எனத் திருநீறு தரிப்பதால் வினைகள் தங்கா, சிவகதி சாரும், அழகிய திருவடியைச் சேர்வர் என்று திருநீற்றின் பயனைக் கூறியிருக்கின்றார். இதுவரை திருநீற்றின் மகிமையையும் அதை அணிவதால் வரும் பயன்களையும் பற்றி அறிந்தோம். அதை எப்படி அணியவேண்டும் என்பதையும் தெரிந்து கொள்வோம். திருநீற்றை மூன்று குறிகளாகப் பூசலாம் அல்லது பரவியும் பூசலாம். தீட்சை பெற்றவர்களே மூன்று குறிகளாகப் பூசலாம் எனபது விதி. திருநீற்றை வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் நின்று அண்ணாந்து நெற்றியிலே சிவசிவ என்று சொல்லி அணிவதே சாலச்சிறந்தது. ஞானசம்பந்தர் அருளிய திருநீற்றுப் பதிகத்தையும் பாராயணம் செய்யலாம்.

"ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலிநி லாவும்பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னனுட லுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே."

# திருமுறையும் திருவைந்தெழுத்தும்

சைவ சமயத்தவர் ஓதவேண்டிய தலையாய சிவமந்திரம் திருவைந்தெழுத்தாகும். இதனை நமசிவாய என்றும் சிவாயநம என்றும்திருமுறைகள் போற்றுகின்றன

"வேத நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே"

"கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே".

"கற்றவர்தொழு தெத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சி வாயவே"

"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க"

"சித்தம் ஒடுக்கிச் சிவாயநமவென்று இருக்கினல்லால்
அத்தன் அருள்பெறலாமோ அறிவிலாப் பேதைநெஞ்சே"

"திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவசக்திநீ பாதிரிப் புலியூரானே"

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்"

என வருவதையும் பார்க்கலாம். இந்த மந்திரத்தில் வரும் ஒவ்வோர் எழுத்தையும் "அந்தியும் நண்பகலும் அஞ்சு பதம் சொல்லி" என ஐந்து பதங்களாகப் பாராட்டுகிறார் சுந்தரர். இதில் வரும் சி சிவத்தையும் வ திருவருட்சக்தியையும் ய உயிரையும் குறிக்கின்றன. சியும் வவ்வும் பதியையும் ய ஆன்மாவாகிய பசுவையும் ந வும் ம வும் பாசத்தையும் சுட்டி நிற்கின்றன. மேலும் யநம சேர்ந்து தொழிற்படுவது ஊன நடனம்

என்றும் யவ வினால் சி ஆகிய சிவத்தோடு கலத்தல் ஞானநடனம் என்றும் சொல்லப்படும். உயிர்களின் விடுதலையைக் கருத்திற் கொண்டு சிவபெருமான் ஐந்தெழுத்தைத் திருமேனியாகக் கொண்டு திருக்கூத்தினை இயற்றுகிறார். இம்மந்திரம் குறிக்கும் பொருள் என்றும் அழியா இயல்பினது. அதுபோல ஐந்தெழுத்துக்களும் அழியா இயல்பின அவற்றின் மகிமை அளப்பில. ஞானசம்பந்தப் பெருமானுக்கு ஏழாவது வயதிலே பூணூல் தரிக்கும் சடங்கு நடந்த பொழுது அவருக்குக் காயத்திரி மந்திரம் உபதேசிக்கப்பட்டது. அப்போது உபதேசிக்கப்பட வேண்டிய மந்திரம் அதுவல்ல. ஐந்தெழுத்து மந்திரமே உபதேசிக்கப்பட வேண்டும் எனக்கூறி ஐந்தெழுத்துப் பதிகம் பாடி அதில்

"மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்(கு)
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே"

என்ற பாடலைப் பாடி, வேதியர் ஓதவேண்டிய மந்திரம் ஐந்தெழுத்து என உபதேசம் பண்ணினார். மேலும் நீங்கள் சொல்லிய மந்திரத்துக்கு அந்தி, சந்தி என்று ஓதுதற்கு காலவரையறை உண்டு. ஐந்தெழுத்துக்கு அவ்வித கால வரையறை வேண்டியதில்லை எந்நேரமும் ஓதலாம் என

"துஞ்சலும் துஞ்சலிலாத போழ்திலும்
நெஞ்சகம் நைந்து நினைமின்".

என்று உபதேசம்பண்ணி அதன் மகிமையை விளக்கினார். பின் பதினாறாவது வயதிலே திருமணம் நடந்த போது அவரை ஆட்கொள்ளத் தோன்றிய சோதியுட் புகும் நேரத்தில் அங்கு இருந்தவர்களுக்கு உபதேசமாக,

"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்நெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே".

என நமசிவாயப் பதிகம் பாடி அதன் மகிமையை உலகறியத் தந்தார்.நாவுக்கரசர் பெருமானைச் சமணர் கொல்வதற்காகக் கல்லுடன் பூட்டி கடலில்வீசியசெய்தியில்

"கல்லினோ டென்னைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாயினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றி யுய்ந் தன்னே"

என ஐந்தெழுத்தின் அருளின் மகிமையைக் கூறியிருக்கிறார். கல்லுடன் கடலிலே கட்டி வீசியபோது

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே"

என நமச்சிவாயப் பதிகம் பாடினார். அதில்நலம் தரும் நமச்சிவாய எனும் ஐந்தெழுத்து என்பதைக கூறி அது எல்லோரது உள்ளங்களிலும் ஏற்றப்பட வேண்டிய விளக்கு என்று,

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே"

எனப் பாடியிருப்பது படித்துப் பயன் பெறவேண்டிய தொன்றாகும். மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகம் பாட ஆரம்பித்தபோதே "நமச்சிவாய வாழ்க" என ஐந்தெழுத்தைப் பாடிப் பரவியே தொடங்கியிருக்கிறார். மேலும் ஐந்தெழுத்தைச் சொல்லுதற்குத் திருவேசறவில்

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"

என்னும் பாடலில் "சிவாயநம" என்று சொல்லுவதற்கு முன்னே என்ன தவம் செய்திருக்க வேண்டும் என வியந்து அதன் மகிமையைப் போற்றுகிறார். மேலும் அவர் வாசகத்திலே,

"உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கு மருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே."

என்னும் பாடலின் முதல் இரு அடிகளிலும் சிவயசிவ என்னும் திருமந்திரம் மறை பொருளாக அமைந்திருப்பதைக் காணலாம்.

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருனை அறியகிற் பாரே

எனும் பாடலில் "சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்" என்ற தொடரில் "சிவசிவ" எனும் திருமந்திரம் ஒடுங்கி இருப்பதை உணரலாம். சிவ சிவ என்றோதுவதால் விளையும் பயனைத் திருமந்திரத்திலே திருமூலர்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

எனக் கூறியிருப்பதைப் பார்த்து சிவசிவ என்றோதிச் சிவகதி பெறுவோம். ஐந்தெழுத்தை திருமூலர் ஒரு கனியாகக் கொண்டு மென்றும் தின்றும் சுவைத்தும்

ஒன்றுகண் டேன்இவ் வுலகுக் கொருகனி
நன்றுகண் டாயது நமச்சிவா யக்கனி
மென்றுகண் டாலது மெத்தென் றிருக்கும்
தின்றுகண் டாலது தித்திக்கும் தானன்றே.

எனத் தாம்பெற்ற அநுபவத்தைக் கூறியிருப்பது போற்றுதற்குரியது ஐந்தெழுத்தைப்பற்றி நாவுக்கரசர் பெருமான் சொல்வதைக் கேட்டு அதன் வழி ஒழுகுவோம்.

இருந்து சொல்லுவன் கேண்மின்கள் ஏழைகாள்
அருந்த வம்தரும் அஞ்செழுத் தோதினால்
பொருந்து நோய்ப்பிணி போகத் துரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே.

என்பது அவர் வாக்கு. திருவைந்தெழுத்தைப் போல நலம் தரும் மந்திரம் வேறில்லை என்பதை மேலே கூறியுள்ள திருமுறைத் திருப்பாடல்கள் வாயிலாக அறிந்தோம். அதை நாளும் ஓதி இம்மையிலும் மறுமையிலும் பயன் பெறுவோம். இவ்வுலகுக்கு ஒரு கனியாம் நமச்சிவாயக்கனி உண்போம்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
திருச்சிற்றம்பலம்

## சைவசமயத்தின் மேலானகொள்கை– திருஞானசம்பந்தர்

1. வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே

## சைவம் என்றால் சிவ சம்பந்தமானது. அச்சிவத்தை அறிவோம்.

2. அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரியர் ஏறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கையர் ஆயினும்
பெரியர் ஆரறி வார்அவர் பெற்றியே

3. வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தி யாஎழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ

## சிவம் ஆராய்ந்து அறியமுடியாதவர்

4. ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும்
சோதிக்க வேண்டாசுடர் விட்டுளன் எங்கள்சோதி
மாதுக்க நீங்கலுறுவீர் மனம் பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையேவந்து சார்மின்களே.

## சிவத்தை அறியும் முறைமை

5. விறகில் தீயினன் பாலிற் படுநெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே.

## திருவடி மகிமை

6. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே.

7. மனிதர் காள் இங்கேவம் ஒன்று சொல்லுகேன்
கனிதந்தாற் கனி உண்ணவும் வல்லீரே
புனிதன் பொற்கழல் ஈசன் எனும் கனி
இனிதுசாலவும் ஏசற்றவர் கட்கே.

## சிவமந்திரம்:

**“நமசிவாயஎனும் அஞ்செழுத்து அதுவே திருநாமமுமாகும்.**
**அஞ்செழுத்தின் மகிமையையும் பயனையும் அறிவோம்”.**

### திருஞானசம்பந்தர்

8. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

9. நம்பு வாரவர் நாவின் நவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம் பொனார் திலகம் உலகுக் கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே.

10. நெக்கு ளார்வம் மிகப் பெருகி நினைந்து
அக்குமாலை கொண்டு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவராத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சி வயவே.

11. இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம் வந்தோத வல்லார் தமை நண்ணினால்
நியமந்தான் நினைவார்க் கினியான் நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே

12. கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே

13. மந்தரமன பாவங்கள் மேவிய
பந்தனையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே

14. நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயின் உருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே

15. இலங்கை மன்னன் எடுத்த அடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலம்கொள் நாமம் நமச்சி வாயவே.

16. போதனும்போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான் முடிநேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாமம் நமச்சி வாயவே.

17. கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
செஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே

18. நந்தி நாமம் நமச்சிவாய வெனும்
சந்தையாற் தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லாரெல்லாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே.

## அஞ்செழுத்து விளக்கம்

- திருநாவுக்கரசர்

19. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

20. பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக் கருங்கலம நமச்சி வாயவே

21. நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே

22. இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே

## ஈசன் பூசுவது திருநீறு அதன் மகிமையை அறிவோம் - ஞானசம்பந்தர்

23 மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கனதிருஆலவா யான்திரு நீறே.

24 வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந்த ருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத்த குவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப்பு னல்வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே.

25 முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே

26 காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணம் தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே

27 பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேசஇனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கொடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயான் திருநீறே

28 அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்த மதாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே.

29 எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவதுநீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவதுநீறு
ஆயிலைப் பொலிதருசூலத் தாலவாயான் திருநீறே

30 இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங்கும் திருமேனி ஆலவாயான் திருநீறே

31 மாலோ டயனறியாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடிநீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவதுநீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆலவாயான் திருநீறே

32 குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூட
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத்தவர் பணிந் தேத்தும் ஆலவாயான் திருநீறே.

33 ஆற்றல் அடல்விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயினதீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே

## திருவைந்தெழுத்தும் திருநீறும் தரும் பயன் அறிவோம்

திருநாவுக்கரசர்.

34 சந்திரற் சடையில் வைத்த சங்கரன் சாமவேதி
அந்தரத் தமரர் பெம்மான் ஆன் நல்வெள்ளூர்த்தியான்தன்
மந்திரம் நமச்சிவாய ஆக நீறணியப் பெற்றால்
வெந்தறும் வினையும்நோயும் வெவ்வழல் விறகிட்டன்றே.

## உடலையும் உடல் ஊறுப்புக்களையும் சிவவழிபாட்டிற் பயன்படுத்துங்கள் திருஅங்கமாலை

திருநாவுக்கரசர்

35 தலையே நீ வணங்காய் தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

36 கண்காள்காண்மின்களோகடல் நஞ்சுண்டகண்டன்தனை
எண்தோள் வீசி நின்றாடும் பிரான் தனைக்
கண்காள் காண்மிகளோ

37 செவிகாள் கேண்மின்களோ சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான்திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ

38 மூக்கே நீ முரலாய் முது காடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்

39 வாயே வாழ்த்து கண்டாய் மதயானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான்தன்னை
வாயே வாழ்த்து கண்டாய்

40 நெஞ்சே நீ நினையாய் நிமிர்புன்சடைநின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்

41 கைகாள் கூப்பித் தொழீர் கடிமாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர்

42 ஆக்கையாற் பயனென் அரன்கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப்போற்றி என்னாதஇவ்
ஆக்கையாற் பயனென்

43 கால்களால் பயனென் கறைக்கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால்களாற் பயனென்

44 உற்றார் ஆருளரோ உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்
குற்றார் ஆருளரோ

45 இறுமாந்திருப்பன் கொலோஈசன் பல்கணத் தெண்ணப்பட்டு
சிறுமான்ஏந்தி தன் சேவடிக்கீழ்ச் சென்றங்
கிறுமாந்திருப்பன் கொலோ

46 தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்

## "வழிபட வேண்டியவர் சிவன் எனும் செம்பொருளாம்"

ஞானசம்பந்தர்

47 கல்லால் நீழல் அல்லாத் தேவை
நல்லார் பேணார் அல்லோ நாமே

48 கொன்றை சூடி நின்ற தேவை
அன்றி யொன்று நன்றிலோமே

49 கல்லா நெஞ்சின் நில்லான் ஈசன்
சொல்லா தாரோடு அல்லோ நாமே

50 கூற்றுதைத்த நீற்றினானைப்
போற்றுவார்கள் தோற்றினாரே

51 அந்தண் காழி பந்தன் சொல்லை
சிந்தை செய்வோர் உய்ந்துளோரே.

## நாவுக்கரசர்

52 வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே

53 செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்திசெய் மனப் பாறைகட்கு ஏறுமோ
அத்தன் என்று அரியோடு பிரமனும்
துத்தியஞ் செய நின்ற நற்சோதியே

54 நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடி நாராயணர் அங்கனே
ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர்
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே

55 வாது செய்து மயங்கும் மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவர் எனப் படுவார்க்கெல்லாம்
மாதேவன் அலால் தேவர் மற்று இல்லையே

56 கூவல் ஆமை குரை கடல் ஆமையைக்
கூவலோடு ஒக்குமோ கடல் என்றல் போல்
பாவகாரிகள் பார்ப்பரிது என்பரால்
தேவதேவன் சிவன் பெருந்தன்மையே

**சிவன் தாள் தொழுங்கள், பெறும் பயனை அறியுங்கள்**

57 ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைந் தார்க்கெல்லாம்
தானங் காட்டித்தன் தாளடைந் தார்கட்கு
வானங் காட்டுவர் போல்வன்னி யூரரே

58 பெருகலாம் தவம்பேதமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருந்தலாம்
பருகலாம் பரமாயதோர் ஆனந்தம்
மருகாலானடி வாழ்த்தி வணங்கவே

59 பூரியா வரும் புண்ணியம் பொய் கெடும்
கூரிதாய அறிவுகை கூடிடும்
சீரியார் பயில் சேறையுட் செந்நெறி
நாரி பாகன் தன் நாமம் நவிலவே

60 அல்லல் என் செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செய்யும்
தில்லை மானகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே

## சிவனை வழிபடுவதால் மண்ணில் நல்ல வாழ்வும் இறுதியில் நல்ல கதியும் கிடைக்கும்

61 மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் ல..துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாலொடும் பெருந்தகை யிருந்ததே

ஞானசம்பந்தர்

62 தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே

சுந்தரர்

# எட்டாந்திருமுறை: திருவாசகம்

## சிவன் மகிமையை இயம்புகின்றது :
## அன்னைப் பத்து
## மாணிக்கவாசகர்

ஒரு குழந்தை சிவபெருமானின் பல்வேறு திருவுருவப் பொலிவினையும் அதனால் உள் எழும் மகிழ்வினையும்தன் தாயிடம் சொல்லுதல்.

63 வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையின ரன்னே யென்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கு
நாதரிந் நாதனா ரன்னே யென்னும்

64 கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உண்ணின் றுருக்குவர் அன்னே யென்னும்
உள் நின்று உருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே யென்னும்

65 நித்த மணாளர் நிரம்ப வழகியர்
சித்தத் திருப்பரா லன்னே யென்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரா லன்னே யென்னும்

66 ஆடரப் பூணுடை தோல்பொடி பூசிற்றோர்
வேடமிருந்தவா றன்னே யென்னும்
வேடமிருந்தவா கண்டு கண்டு என் உள்ளம்
வாடும் இது என்னே அன்னே யென்னும்

67 நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டி நன்னா டரால் அன்னே யென்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
யாண் டன்பு செய்வரா லன்னே யென்னும்

68 உன்னற் கரிய சீருத்தர் மங்கையர்
மன்னுவ தென்னெஞ்சி லன்னே யென்னும்
மன்னுவ தென்னெஞ்சின் மாலயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே யென்னும்

69 வெள்ளைக் கலிங்கதர் வெண்திரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே யென்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரிமேற் கொண்டேன்
உள்ளங் கவர் வரா லன்னே யென்னும்

70 தாளி யறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆள் எம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆள் எம்மை ஆளும் அடிகளார் தங்கையில்
தாளம் இருந்தவா றன்னே என்னும்

71 தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்
நையும் இது என்னே அன்னே என்னும்

72 கொன்றை மதியமும் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம் உன்மத்தமே
இன்றெனக் காணவா றன்னே என்னும்

## திருத்தசாங்கம்

இப்பதிகத்தில் சிவபெருமானின் பெயர் ஊர் நாடு ஆறு மலை புரவி படை பறை தார் கொடி என்ற பத்துப் பெருமைகள் போற்றப்படுகின்றன.

73 ஏராரி ளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம்தேர்ந்துரையாய் - ஆரூரான்
செம்பெருமான் வெண்மலரான பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று.

74 ஏதமிலா இன்சொல் மரகதமே யேழ்பொழிற்கும்
நாதன்நமை யாளுடையான் நாடுரையாய் காதலவர்க்
கன்பாண்டு மீளா வருள் புரிவான் நாடென்றும்
தென்பாண்டி நாடே தெளி.

75 தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதியென் - கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேல் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தரகோ சமங்கை ஊர்

76 செய்யவாய்ப் பைஞ்சிறகின்செல்வீநம் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையான் ஆறுரையாய் - தையலாய்
வான்வந்த சிந்தை மலங்களுவ வந்திழியும்
ஆனந்தங் காணுடையான் ஆறு.

77 கிஞ்சுகவாய் அஞ்சுகமே கேடுஇல் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவு மலைபகராய் - நெஞ்சத்து
இருளகல வாள்வீசி இன்பமரு முத்தி
அருளுமலை என்பதுகாண் ஆய்ந்து

78 இப்பாடே வந்தியம்பு கூடுபுக லென்கிளியே
ஒப்பாடாச் சீருடையான் ஊர்வதென்னே – எப்போதும்
தேன்புரையும் சிந்தையராய்த் தெய்வப்பண் ணேத்திசைப்ப
வான்புரவி ஊரும் மகிழ்ந்து

79 கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந்துறைக் கோன்
மாற்றாரை வெல்லும் படைபகராய் - யேற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைகொள் படை

80 இன்பால் மொழிக்கிள்ளா யெங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய் - அன்பால்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை.

81 ஆய மொாழிக்கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தாரென் தீயவினை
நாளுமணு காவண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளியறு காம்உவந்த தார்.

82 சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய் - சாலவும்
ஏதிலார் துண்என்ன மேல்விளங்கி ஏர்காட்டும
கோதிலா ஏறாம் கொடி.

## அச்சப்பத்து

மாணிக்கவாசகப்பெருமான் யாருக்கு அஞ்சவேண்டும் என்கிறார்.

83 புற்றில் வாளரவு மஞ்சேன் பொய்யர் தம்மெய்யும் மஞ்சேன்
கற்றைவார் சடையெம் அண்ணல் கண்ணுதல் பாதம்நண்ணி
மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டென நினைந்து
எம்பெம்மாற்
சுற்றிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே.

84 வெருவரேன்வேட்கைவந்தால்
வினைக்கடல்கொளினும்அஞ்சேன்
இருவரால் மாறுகாணா எம்பிரான் தம்பிரானாம்
திருஉருஅன்றி மற்றோர் தேவரெத் தேவரென்ன
அருவராதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே

85 வன்புலால் வேலுமஞ்சேன் வளைக்கையார் கடைக்
கணஞ்சேன்
என்புளலாம் உருகநோக்கி அம்பலத்து ஆடுகின்ற
என்பொலா மணியைஏத்தி இனிதருள் பருகமாட்டா
அன்பிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே.

86 கிளியனார் கிளவி அஞ்சேன் அவர்கிளிமுறுவல் அஞ்சேன்
வெளிய நீறாடும்மேனி வேதியன்பாதம் நண்ணித்
துளியுலாங் கண்ணராகித் தொழுதழு துள்ளம் நெக்கிங்
அளியிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே.

87 பிணிஎலாம் வரினும்அஞ்சேன் பிறப்பினோடு இறப்பும்
அஞ்சேன்
துணிநிலா அணியினான்தன் தொழும்பரோடு அழுந்தி அம்மால்
திணி நிலம்பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீறு
அணிகிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே.

88 வாளுலாம் எரியும் அஞ்சேன் வரை புரண்டிடினும் அஞ்சேன்
தோளுலா நீற்றன் ஏற்றன் சொற்பதங் கடந்த வப்பன்
தாள தாமரைகள் ஏத்தித் தடமலர் புனைந்து நையும்
ஆளலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே.

89 தகைவிலாப் பழியு மஞ்சேன் சாதலை முன்னம்அஞ்சேன்
புகை முகந்து எரிகை வீசிப் பொலிந்த அம்பலத்துள் ஆடும்
முகை நகைக் கொன்றை மாலை முன்னவன் பாதம் ஏத்தி
அகம்நெகா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே.

90 தறி செறி களிறு மஞ்சேன் தழல்விழி உழுவை அஞ்சேன்
வெறி கமழ் சடையன்அப்பன் விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்கள் ஏத்திச் சிறந் தினிதிருக்க மாட்டா
அறிவிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே.

91 மஞ்சுலாம் உருமும் அஞ்சேன் மன்னரோ டுறவு மஞ்சேன்
நஞ்சமே அமுதமாக்கும் நம்பிரான் எம்பிரானாய்ச்
செஞ்செவே ஆண்டுகொண்டான் திருமுண்டந்தீண்ட மாட்டா
தஞ்சுவார் அவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே.

92 கோணிலா வாளி யஞ்சேன் கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணியினானை நினைந்து நைந்துஉருகி நெக்கு
வாணிலாம் கண்கள்சோர வாழ்த்தி நின்று ஏத்தமாட்டா
ஆணலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே.

# திருக்கோத்தும்பி

மனம் சிவனோடு ஒன்றும்படி பாடியவை மனம் - அரசவண்டாக உருவகிக்கப்படுகிறது. மனம் பெரும் பகுதியும் உலக நாட்டத்திலேயே செல்கிறது. அதைவிடுத்து பத்தி நாட்டத்தில் செல்லுமாறு தூண்டப்படுகிறது.

93 பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றுதாய் கோத்தும்பி

94 நானார் என்உள்ளமார் ஞானங்களார் என்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனாருடைத்தலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றுதாய் கோத்தும்பி

95 தினைத் தனை உள்ளதேர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி

96 அத்தேவர் தேவர் அவர் தேவரென்றிங்கன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும்இல்லாதென் பற்றற நான்பற்றி நின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பி

97 கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றுதாய் கோத்தும்பி

## திருத்தெள்ளேணம்

தெள்ளேணம் என்பது பறை அல்லது கைகொட்டி ஆடும் விளையாட்டு.

98 திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உரு நாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டோமோ

99 அருமந்த தேவர் அயன் திருமாற் கரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளிக்
கரு வெந்து வீழக் கடைக்கணித்தென் உளம்புகுந்த
திருவந்தவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ

100 முந்திக் குழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக் கருளி அடியேனை ஆண்டு கொண்டு
பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டோமோ.

101 உருகிப் பெருகி உளங்குளிர முகந்துகொண்டு
பருகற்கினிய பரங்கருணைத் தடங்கலை
மருவித் திகழ் தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ

102 குலம்பாடிக் கொக்கிறகும் பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்டவா பாடி நாள்தோறும்
அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ

## திருச்சாழல்

சாழல் என்பது விளையாட்டாக கைகொட்டி நகைத்துப் பேசுதல் அது ஆகுபெயராக விளையாட்டைக் குறிக்கும் பாடலுக்கானது. பாடல் கேள்வியும் பதிலுமாக அமைந்துள்ளது புத்த சமயத்தவனாகிய ஈழமன்னன் மகள் ஊமை நீங்கப்பெற்றுப் பேசியபோது சொன்னதாக அமைந்தவை.

*103* பூசுவதும்வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடி
பூசுவதும் பேசுவதும்பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயலபானான் சாழலோ

*104* என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடி
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ

*105* கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடி
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ

*106* கோலாலமாகி குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன் சதுர்தான் என்னேடி
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர் காண் சாழலோ

*107* தானந்தம் இல்லான் தனையடைந்த நாயெனை
ஆனந்த வெள்ளத்தழுத்து வித்தான் காணேடி
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திரவடிகள்
வானுந்து தேவர்கட் கோர் வான்பொருள் காண் சாழலோ

## அச்சோப்பதிகம்

அச்சோ என்பது அதிசயத்தை உணர்த்தும்குறிப்புச்சொல்.

108 முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயலவேனை
பத்திநெறிஅறிவித்துப்பழவினைகள்பாறும்வண்ணம்
சித்த மலம் அறுவித்துச்சிவமாக்கி எனைஆண்ட
அத்தன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவோ

109 செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்ச்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவோ.

## 9ம் திருமுறை திருவிசைப்பா

திருவிசைப்பா என்பது கடவுள் தன்மை பொருந்திய இசைப்பாட்டு எனப் பொருள்படும் தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பின்னர் அருள் ஆசிரியர் சிலரால் இசைத்தமிழாக அருளிச் செய்யப்பட்ட திருப்பதிகங்களே "திருஇசைப்பா" எனப் பெயர்பெற்றுள்ளன.

110 ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைக்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

111 நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவனபோகமே யோக
வெள்ளமே மேருவில் வீரர்
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே

112 சேவேந்து வெல்கொடி யானே என்னும்
சிவனே என்சேமத் துணையே என்னும்
மாவேந்து சாரல் மகேந்திரத்தில் வளர்
நாயகா இங்கே வாராய் என்னும்
பூவேந்தி மூவா யிரவர் தொழப்
புகழேந்து மன்று பொலிய நின்ற
கோவே என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே

113 கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந்தனவே

114 தனத நற்றோளா சங்கராசூல
பாணியே தாணுவே சிவனே
கனக நற்றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத்து அமரசே கரனே
உனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.

## 9ம் திருமுறை திருப்பல்லாண்டு

இதனைப் பாடியவர் சேந்தனார். அற்புதங்கள் பலவற்றை நிகழ்தியவர் ஒரு சமயம் சேந்தனார் தில்லையம்பலத்தில் இருந்தபொழுது மார்கழித் திருவிழாவில் ஓடாது தடைப்பட்டு நின்ற திருத்தேரைத் திருப்பல்லாண்டு பாடித் தானே ஓடி நிலையினை அடையுமாறு செய்தார். இறைவனைப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவது திருப்பல்லாண்டு.

115 மன்னுகதில்லை வளர்கநம்பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெல்லாம் விளங்க
அன்ன நடைமடவாள் உமைகோன் அடியோமுக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்கநெறிதந்தபித்தற்குப்பல்லாண்டு கூறுதுமே

116 மிண்டுமனத்தவர்போமின்கள் மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டும் கொடுத்தும்குடிகுடிஈசற்குஆட்செய்மின் குழாம்புகுந்து
அண்டங்கடந்தபொருள்அளவில்லதோர்ஆனந்தவெள்ளப்பொருள்
பண்டும்இன்றும்என்றும்உள்ளபொருள்என்றேபல்லாண்டுகூறுதுமே

117 பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச்சக்கரம்அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும்அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

118 ஆரார் வந்தார்அமரர் குழாத்தில்அணியுடை ஆதிரை நாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டுகூறுதுமே

119 சொல்லாண்டகருதிப் பொருள்சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும்சில தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேருவிடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டெனும்பதங்கடந் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாம் திருமுறை
## திருமூலர் திருமந்திரம்

இதனை அருளியவர் திருமூல நாயனார் இவர் சிறந்தயோகி மூவாயிரம் ஆண்டுகள் இப்பூமியில் வாழ்ந்தவர் நந்தி அருள் பெற்று மூவாயிரம் திருமந்திரப்பாடல்களைப் பாடி அருளியவர்

120 சிவனோடொக்கும் தெய்வம் தேடினுமில்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவருமில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
துவனச் சடைமுடித் தாமரை யானே

121 முன்னை ஒப்பாயுள்ள மூவர்க்கும்மூத்தவன்
தன்னை ஒப்பாய் ஒன்றும் இலாத் தலைமகன்
தன்னை அப்பா எனில் அப்பனுமாய் உளன்
பொன்னை ஒப்பாயுள்ள போதகத்தானே

122 அவனை ஒளிய அமரரும் இல்லை
அவன்றிச் செய்யும் அருந்தவம்இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன்றில்லை
அவனன்றி ஊர்புகு மாற்றியேனே.

123 மாணிக்கத்துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத்துள்ளே மரகத மாடமாய்
ஆணிப் பொன்னம்பலத்தில் ஆடும்திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற்றேனே.

124 ஒன்று கண்டேன் இவ்வுலகுக் கொருகனி
நன்று கண்டாய் அது நமச்சிவாயக்கனி
மென்று கண்டால் அது மெத்தென்றிருக்கும்
தின்று கண்டால் அது தித்திக்கும் தானே.

125 சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான் என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்து நின்று
ஆடுவன் ஆடி அமரர் பிரான் என்று
நாடுவன் நானின்று அறிவதுதானே

126 அன்புள்ளுருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை ஈசனை
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானன்றே

127 கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே ஆமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மானதிரு வடி சேர்வரே

128 புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அது கண்டு அருள் புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறியாமல் நழுவுகின்றாரே

129 யாவர்க்குமாம் இறைவர்க் கொருபச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்பொழுது ஒருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே

130 அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர் பொருள் வவ்வன்மின்
செவ்வியனாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்வி கொடுமின் தலைப்ட்டபோதே

131 கொலையே களவு கள் காமம் பொய்கூறல்
மலைவான பாதகமாம் அவை நீக்கித்
தலையாம்சிவனடி சார்ந்து இன்பம் சார்ந்தோர்க்கு
இலையாம் இவை ஞானாந்தத் திருத்தவே.

132 சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே

133 அரகர என்ன அரிய தொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரருமாவர்
அரகர என்ன அறும் பிறப்பன்றே.

## பதினொராம் திருமுறை
## பாடியவர் பன்னிருவர்

134 எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும்
மனக்கினியவைப்பாக வைத்தேன்- எனக்கவனைக்
கொண்டேன்பிரானாகக் கொள்வதுமேஇன்புற்றேன்
உண்டே எனக்கரிய(து) ஒன்று

135 ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தெழுந்தேன்
ஒன்றே என் உள்ளத்தின் உள்ளடைந்தேன் ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற்(கு) ஆளாம் அது

136 பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே

137 கறுத்தகண்டா அண்டவாணாவருபுனல் கங்கை சடை
செறுத்த சிந்தா மணியே தில்லை யாய் ஏன்னைத் தீவினைகள்
ஒறுத்தல் கண்டால் சிரியாரோ பிறரென் உறுதுயரை
அறுத்தல் செய்யா விடின் ஆர்க்கேவரும் சொல்லரும்பழியே

138 தொழுதும்வணங்கியும் மாலயன் தேடரும்சோதி சென்றாங்(கு)
எழுதும்தமிழ்பழ ஆவணம் காட்டி என்கருன் குடி
முழுதும்அடிமை வந்(து) ஆட்செய எனப் பெற்றவன்
முரல்தேன்
ஒழுகு மலரின் நற்றார் எம்பி ரான்நம்பி யாருரரே

## பன்னிரண்டாம் திருமுறை: பெரியபுராணம்
## பாடியவர்: சேக்கிழார்பெருமான்

139 உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

140 ஊன டைந்த உடபின் பிறவியே
ஏன டைந்தஉறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டஞ்செய் வரதர்பொற் றாள்தொழ

141 கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச்சிரத்தின் மேலாம்
சிற்பரவியோமமாகும்திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன்நடம்செய் கின்றபூங்கழல்போற்றிபோற்றி

142 ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும்கரணங்கள்நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

143 ஆதியாய் நடுவும் ஆகி அளவிலாஅளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாநிற்கும தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

144 சொல்லுவ தறியேன்வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந்தருளி என்னைவழித்தொண்டு கொண்டயாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி என்ன.

145 இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறபிபுண்டேல் உன்னை
என்றும்
மறவாமை வேண்டும்இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றாா.

## திருப்புகழ்

பாடியவர் அருணகிரிநாதர்

146 தானந்த தானந்தத் தனதான

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல் கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும்பெருமாளே

147 தனத்தத் தானத் தனதான

கருப்பத் தூரிற் பிறவாதே கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தனுபூதி சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் றாருக் குரியோனே பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற்கொடியோனே செகத்திற் சோதிப்
பெருமாளே

148 தனதான தானத் தனதான

கலைமேவு ஞானப் பிரகாசக்
கடலாடி ஆசைக் கடலேறி
பலமாய வாதிற் பிறழாதே
பதிஞான வாழ்வைத் தருவாயே
மலைமேவு மாயக் குறமாதின்
மனமேவு வாலக் குமரேசா
சிலைவேட சேவற் கொடியோனே
திருவாணி கூடற்பெருமாளே

149 துள்ளுமத வேட்கைக் கணையாலே
தொல்லைநெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத்தழுவாயே
தெள்ளுதமிழ் பாடல் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி

திருச்சிற்றம்பலம்

# தமிழ் அர்ச்சனை

"செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு நற்கலை தெரிந்தவரோடு அந்தமில்கு ணத்தவர்க ளர்ச்சனைகள் செய்யஅமர் கின்ற அரனூர்".

என ஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய பாடல் அடிகளால் பண்டைக் காலத்தில் தமிழ் மொழியிலும் அர்ச்சனைகள் செய்யப்பட்டன என்பதை நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது. எம்மால் தொகுக்கப்பட்ட சிவன் அம்மன் பிள்ளையார் முருகன் போற்றி அர்ச்சனைகள் மெய்யடியார்கள் பாடல்களிலிருந்து தெரிந்தெடுத்துத் தொகுக்கப்பட்ட நிறை மொழிகளாகும்

திருமுறைக் கூட்டத்தார்
விம்பிள்டன்.

# தமிழ் அர்ச்சனை
# அருளாளர் வாயிலாக வந்த நிறை மொழிகள்

## சிவன்

| | | |
|---|---|---|
| 1. | ஓம் அமரர்தம் இறைவா | போற்றி |
| 2. | ஓம் அடியவர்க்காரமுதானாய் | போற்றி |
| 3. | ஓம் அண்ணாமலை எம் அண்ணா | போற்றி |
| 4. | ஓம் அயனொடு மால் அறியாய் | போற்றி |
| 5. | ஓம் அடங்கார் முப்புரம் எரித்தாய் | போற்றி |
| 6. | ஓம் அடியார்க் கல்லல் அறுப்பாய் | போற்றி |
| 7. | ஓம் அழிவிலா ஆனந்தவாரி | போற்றி |
| 8. | ஓம் அஞ்சே லென்று அருள்வாய் | போற்றி |
| 9. | ஓம் அல்லல் பிறவி அறுப்பாய் | போற்றி |
| 10. | ஓம் அருவமும் உருவமுமானாய் | போற்றி |
| 11. | ஓம் ஆலவாயமர்ந்த அத்தனே | போற்றி |
| 12. | ஓம் ஆனைக்காலில் அண்ணலே | போற்றி |
| 13. | ஓம் ஆதி நாயக | போற்றி |
| 14. | ஓம் ஆதிரை நாயக | போற்றி |
| 15. | ஓம் ஆனஞ்சும் ஆடினாய் | போற்றி |
| 16. | ஓம் ஆராத இன்ப அமுதே | போற்றி |
| 17. | ஓம் ஆலாலம் உண்டு உகந்தாய் | போற்றி |
| 18. | ஓம் ஆராஅமுதே அருளே | போற்றி |
| 19. | ஓம் ஆற்றின்ப வெள்ளமே | போற்றி |
| 20. | ஓம் ஆலமர் கடவுள் | போற்றி |
| 21. | ஓம் இலையார்ந்த சூலப்படையாய் | போற்றி |
| 22. | ஓம் இடர்களையும் எந்தாய் | போற்றி |
| 23. | ஓம் இடைமருதுறையும்மருந்தே | போற்றி |
| 24. | ஓம் இலங்கு சுடர் எம் ஈசா | போற்றி |
| 25. | ஓம் உழையாடு கரதலம்உடையாய் | போற்றி |
| 26. | ஓம் உலகுக் கொருவனாய் நின்றாய் | பாற்றி |

| | | |
|---|---|---|
| 27. | ஓம் உரை உணர்விறந்த பொருளே | போற்றி |
| 28. | ஓம் உருகுவார் உள்ளத்துள்ளாய் | போற்றி |
| 29. | ஓம் ஊற்றான உண்ணார் அமுதே | போற்றி |
| 30. | ஓம் எந்தமை உய்யக்கொள்வாய் | போற்றி |
| 31. | ஓம் எந் நாட்டவர்க்கும் இறைவா | போற்றி |
| 32. | ஓம் ஏனக்குருளைக் கருளினை | போற்றி |
| 33. | ஓம் ஓங்கி அழலுருவாய் நின்றாய் | போற்றி |
| 34. | ஓம் ஓவாத சத்தத்து ஒலியே | போற்றி |
| 35. | ஓம் கற்றவர்கள் உண்ணும்கனியே | போற்றி |
| 36. | ஓம் கயிலை மலையானே | போற்றி |
| 37. | ஓம் கண்ணார்அமுதக்கடலே | போற்றி |
| 38. | ஓம் கனவிலும் தேவர்க்கரியாய் | போற்றி |
| 39. | ஓம் கடம்பூர் மேவிய விடங்கா | போற்றி |
| 40. | ஓம் கழுநீர் மாலைக் கடவுள் | போற்றி |
| 41. | ஓம் கருங்குருவிக்கன்று அருளினை | போற்றி |
| 42. | ஓம் கச்சாகநாகம் அசைத்தாய் | போற்றி |
| 43. | ஓம் கரியானுக் காழி அளித்தாய் | போற்றி |
| 44. | ஓம் கறைக்கண்டா கண்ணுதலா | போற்றி |
| 45. | ஓம் கனல் காட்டும் கையா | போற்றி |
| 46. | ஓம் கமழ் சடையாய் | போற்றி |
| 47. | ஓம் கங்கைவார் சடையாய் | போற்றி |
| 48. | ஓம் கல்லால் நீழல் ஐயா | போற்றி |
| 49. | ஓம் குற்றாலத்தெம் கூத்தா | போற்றி |
| 50. | ஓம் கூற்றுவனைக் குமைந்தாய் | போற்றி |
| 51. | ஓம் கூடல் இவந்கு குருமணி | போற்றி |
| 52. | ஓம் கொம்பனையாள்கூறா | போற்றி |
| 53. | ஓம் கொன்றைச் சடையாய் | போற்றி |
| 54. | ஓம் கோகழியாண்ட குருமணி | போற்றி |
| 55. | ஓம் சந்தனச்சாந்தின் சுந்தர | போற்றி |
| 56. | ஓம் சங்கரனே நினபாதம் | போற்றி |
| 57. | ஓம் சதாசிவனே நின்பாதம் | போற்றி |
| 58. | ஓம் சிராப்பள்ளி மேவியசிவமே | போற்றி |

59. ஓம் சிவபுரத்தரசே போற்றி
60. ஓம் சீரார் திருவையாறா போற்றி
61. ஓம் செங்கமலத் திருப்பாதா போற்றி
6.2 ஓம் செக்கர் மேனியனே போற்றி
63. ஓம் செம்பொன்னே மரகதமே போற்றி
64. ஓம் சேவார் வெல் கொடியாய் போற்றி
65. ஓம் தண்மதி சூடியசைவா போற்றி
66. ஓம் தன் ஒப்பாரில்லாய் போற்றி
67. ஓம் தக்கன் வேள்வி தகர்த்தாய் போற்றி
68. ஓம் தாளி அறுகின் தாராய் போற்றி
69. ஓம் திங்கள் சடைமுடியாய் போற்றி
70. ஓம் திருக்கழுக் குன்றில்செல்வா போற்றி
71. ஓம் திருவையாறா போற்றி
72. ஓம் தில்லையுட் கூத்தா போற்றி
73. ஓம் துரியமும் இறந்தசுடரே போற்றி
74. ஓம் தூமாலை தும்பை அணிந்தாய் போற்றி
75. ஓம் தென்னாடுடைய சிவனே போற்றி
76. ஓம் தேவர் சிவக்கொழுந்தே போற்றி
77. ஓம் தொண்டர் பரவும்இடத்தாய் போற்றி
78. ஓம் தொழுதகை துன்பம்துடைப்பாய் போற்றி
79. ஓம் தோளா முத்துச் சுடரே போற்றி
80. ஓம் தையலோர் கூறுடையாய் போற்றி
81. ஓம் நம்புவார்க் கரும்பொருளே போற்றி
82. ஓம் நறுங்கொன்றை நயந்தவனே போற்றி
83. ஓம் நால்வேதம் ஆறங்கம்ஆனாய் போற்றி
84. ஓம் நீறணி பவளமேனியனே போற்றி
85. ஓம் நீரார்ந்த செஞ்சடையாய் போற்றி
86. ஓம் படரும் சடைமேல் மதியாய் போற்றி
87. ஓம் பண்ணொடு வீணை பயின்றாய் போற்றி
88. ஓம் பண்ணினேர் மொழியாள்பங்க போற்றி
89. ஓம் பண்டை வினைகள் அறுப்பாய் போற்றி
90. ஓம் பரகதி பாண்டியர்க்கருளினை போற்றி

| | | |
|---|---|---|
| 91. | ஓம் பாற்கடல் பாலனுக்களித்தனை | போற்றி |
| 92. | ஓம் பார்த்தனுக்குப்பாசுபதம்ஈந்தனை | போற்றி |
| 93. | ஓம் பிரமனை சிரம்குறைத்தனை | போற்றி |
| 94. | ஓம் பிறவா இறவாப் பெரியோன் | போற்றி |
| 95. | ஓம் பிறப்பறுக்கும் பிஞ்ஞகா | போற்றி |
| 96. | ஓம் பித்தா பிறைசூடி | போற்றி |
| 97. | ஓம் புலித்தோல் அரைக்கசைத்தோய் | போற்றி |
| 98. | ஓம் பூம்புனலும்தண்மதியும்தரித்தோய் | போற்றி |
| 99. | ஓம் பேராயிரமுடைய பெம்மான் | போற்றி |
| 100. | ஓம் மன்றில் ஆடும் அரசே | போற்றி |
| 101. | ஓம் மந்திரமா மலையாய் | போற்றி |
| 102. | ஓம் மன்னிய கருணை மலையே | போற்றி |
| 103. | ஓம் மன்னிய மங்கை மணாளா | போற்றி |
| 104. | ஓம் மதமா உரிபோர்த்தாய் | போற்றி |
| 105. | ஓம் மூவரிலும் முதலாயமூர்த்தி | போற்றி |
| 106. | ஓம் மேலவர்க்கும் மேலாய் நின்றாய் | போற்றி |
| 107. | ஓம் வெள்ளை ஏறு உகந்தாய் | போற்றி |
| 108. | ஓம் வேயுறு தோளி பங்கா | போற்றி |

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனொடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திரு மூலட்டானனே போற்றி போற்றி

# தமிழ் அர்ச்சனை
## அம்மன்

| | | |
|---|---|---|
| 1) | ஓம் அமரர் பெருவிருந்தே | போற்றி |
| 2) | ஓம் அபிராமித்தாயே | போற்றி |
| 3) | ஓம் அகல்விழியாளே | போற்றி |
| 4) | ஓம் அன்னபூரணி | போற்றி |
| 5) | ஓம் அங்கயற்கண்ணி | போற்றி |
| 6) | ஓம் அழகினுக் கு அணியே | போற்றி |
| 7) | ஓம் அழியாத கன்னிகை | போற்றி |
| 8) | ஓம் அன்ன நடையாளே | போற்றி |
| 9) | ஓம் அனைத்தும் ஈன்றவளே | போற்றி |
| 10) | ஓம் அழியாப் புகழோய் | போற்றி |
| 11) | ஓம் அனைத்தும் வேறானவளே | போற்றி |
| 12) | ஓம் அனைத்தும்ஆனவளே | போற்றி |
| 13) | ஓம் அம்புயாதனத்து அம்பிகை | போற்றி |
| 14) | ஓம் அந்தளிர் மேனியளே | போற்றி |
| 15) | ஓம அதிசயமான வடிவுடையாய் | போற்றி |
| 16) | ஓம் அருட்கடலே | போற்றி |
| 17) | ஓம் அருள்பழுத்த கொம்பே | போற்றி |
| 18) | ஓம் ஆலம் அமுதாக்கியவளே | போற்றி |
| 19) | ஓம் ஆனந்தவல்லி | போற்றி |
| 20) | ஓம் ஆரணங்கே | போற்றி |
| 21) | ஓம் ஆரண நூபுரத்தாளே | போற்றி |
| 22) | ஓம் இறைவர் பாகத்தவளே | போற்றி |
| 23) | ஓம் இமையப் பிடியே | போற்றி |
| 24) | ஓம் இமவான் பெற்ற கோமளமே | போற்றி |
| 25) | ஓம் இசைவடிவான நாயகி | போற்றி |
| 26) | ஓம உண்ணாமுலையாளே் | போற்றி |
| 27) | ஓம் உள்குவார் உள்ளத்தாய் | போற்றி |
| 28) | ஓம் உளக்கோயிற்கேற்றும் விளக்கே | போற்றி |
| 29) | ஓம எழுதரிய மேனியளே | போற்றி |

| | | |
|---|---|---|
| 30) | ஓம எம்பிராடடி | போற்றி |
| 31) | ஓம் எம்பெருமாட்டி | போற்றி |
| 32) | ஓம் எந்தை துணைவி | போற்றி |
| 33) | ஓம் ஏதமிலாளே | போற்றி |
| 34) | ஓம் ஏலவார் குழலி | போற்றி |
| 35) | ஓம் கமலத் திருவே | போற்றி |
| 36) | ஓம் கனங்குழையாளே | போற்றி |
| 37) | ஓம் கடம்ப வனத்தாளே | போற்றி |
| 38) | ஓம் கடம்புசாத்தும்குழல் அணங்கே | போற்றி |
| 39) | ஓம் கருணையின் உருவே | போற்றி |
| 40) | ஓம் கருதுவார்க்கினியாய் | போற்றி |
| 41) | ஓம் கரும்புருவச்சிலையாய் | போற்றி |
| 42) | ஓம் கலா வயிரவி | போற்றி |
| 43) | ஓம் கலைகள் தருபவளே | போற்றி |
| 44) | ஓம் கற்பகவல்லி | போற்றி |
| 45) | ஓம் கறைக்கண்டனுக்குஇனியவளே | போற்றி |
| 46) | ஓம் காஞ்சி காமாட்சி | போற்றி |
| 47) | ஓம் காசி விசாலாட்சி | போற்றி |
| 48) | ஓம் கோமளவல்லி | போற்றி |
| 49) | ஓம் கோமள யாமளை | போற்றி |
| 50) | ஓம் குவளைக் கண்ணி | போற்றி |
| 51) | ஓம் குணக்குன்றே | போற்றி |
| 52) | ஓம் சகலகலாமயிலே | போற்றி |
| 53) | ஓம் சங்கரனார் மனை மங்களமே | போற்றி |
| 54) | ஓம் சங்கரி சாம்பவி | போற்றி |
| 55) | ஓம் சாமளை யாமளை | போற்றி |
| 56) | ஓம் சிந்துரமேனியளே | போற்றி |
| 57) | ஓம் சிந்துரானன சுந்தரி | போற்றி |
| 58) | ஓம் சிவகாமசுந்தரி | போற்றி |
| 59) | ஓம் சிவக்கொழுந்து | போற்றி |
| 60) | ஓம் சுரிமென்குழலாளே | போற்றி |
| 61) | ஓம் சுந்தரவல்லி | போற்றி |

| | | |
|---|---|---|
| 62) | ஓம் செம்பட்டு உடையாளே | போற்றி |
| 63) | ஓம் செம்கலசமுலையாளே | போற்றி |
| 64) | ஓம் திரிபுரசுந்தரி | போற்றி |
| 65) | ஓம் திங்கள்வாண்முகத்தாளே | போற்றி |
| 66) | ஓம் தையல்நாயகி | போற்றி |
| 67) | ஓம் நந்தாவிளக்கே | போற்றி |
| 68) | ஓம் நம்கடம்பனைப் பெற்றவளே | போற்றி |
| 69) | ஓம் நாராயணி | போற்றி |
| 70) | ஓம் நான்முகி | போற்றி |
| 71) | ஓம் பவளத்துவர் வாயாளே | போற்றி |
| 72) | ஓம் பரிமளப் பச்சைக்கொடியே | போற்றி |
| 73) | ஓம் பசும்பொன்கொடியே | போற்றி |
| 74) | ஓம் பஞ்சபாணி | போற்றி |
| 75) | ஓம் பணிமொழியாளே | போற்றி |
| 76) | ஓம் பயிரவி பராசக்தி | போற்றி |
| 77) | ஓம் பாசாங்குசை | போற்றி |
| 78) | ஓம் பாலினும் சொல் இனியவளே | போற்றி |
| 79) | ஓம் பிரணவசொரூபி | போற்றி |
| 80) | ஓம் பிணிக்கு மருந்தே | போற்றி |
| 81) | ஓம் புவனம் பூத்தவளே | போற்றி |
| 82) | ஓம் பூத்தவண்ணம் காத்தவளே | போற்றி |
| 83) | ஓம் பூங்குயிலே | போற்றி |
| 84) | ஓம் பூங்குழல் அணங்கே | போற்றி |
| 85) | ஓம் பூரணாசலமங்கையே | போற்றி |
| 86) | ஓம் மதிநுதலாளே | போற்றி |
| 87) | ஓம் மரகதவல்லி | போற்றி |
| 88) | ஓம் மறைதேடரியவளே | போற்றி |
| 89) | ஓம் மதுரைமீனாட்சி | போற்றி |
| 90) | ஓம் மணியே மணியின் ஒளியே | போற்றி |
| 91) | ஓம் மனோன்மணியே | போற்றி |
| 92) | ஓம் மதீச்செஞ்சடையாளே | போற்றி |
| 93) | ஓம் மறையின் அரும்பொருளே | போற்றி |

94) ஓம் மறையின் பரிமளமே போற்றி
95) ஓம் மாணிக்கவல்லி போற்றி
96) ஓம் மாதுளம்பூ நிறத்தாளே போற்றி
97) ஓம் முக்கண்ணுடை முதல்வி போற்றி
98) ஓம் முத்தேவியரும்ஆனவளே போற்றி
99) ஓம் மும்முதற்கும் வித்தே போற்றி
100) ஓம் முழுஞானப்பெருக்கே போற்றி
101) ஓம் முதல்மூவர்க்கும் அன்னே போற்றி
102) ஓம் முத்திக்கு வித்தானவளே போற்றி
103) ஓம் யாமளவல்லி போற்றி
104) ஓம் யாழின்மென்மொழியாளே போற்றி
105) ஓம் வடிவுடைநாயகி போற்றி
106) ஓம் வேதவிழுப்பொருளே போற்றி
107) ஓம் வேத நாயகி போற்றி
108) ஓம் வேதவல்லி போற்றி

சுரும்புமுரல் கடிமலர்ப் பூங்குழல்போற்றி உத்தரியத்
தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப் பால்சுரந்த
கலசம் போற்றி
இரும்புமனம் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிளநகை போற்றி ஆரணநூபுரம் சிலம்பும்
அடிகள் போற்றி

# தமிழ் அர்ச்சனை

## பிள்ளையார்

1. ஓம் அஞ்சுகரத்த போற்றி
2. ஓம அங்குசபாச போற்றி
3. ஓம அம்பிகை பாலா போற்றி
4. ஓம் அரன்மகனே போற்றி
5. ஓம் அணி மருப்ப போற்றி
6. ஓம் அருள் கனியே போற்றி
7. ஓம் அறுகின் தாராய் போற்றி
8. ஓம் அருள்மதம் மூன்றுடையாய் போற்றி
9. ஓம் அன்பின் விளைவே போற்றி
10. ஓம் ஆரண நுண்பொருளே போற்றி
11. ஓம் ஆதி நாயகா போற்றி
12. ஓம் ஆனைமுகப்பிள்ளை போற்றி
13. ஓம் ஆதிபுராண போற்றி
14. ஓம் ஆரணம் போற்றும் வாரண போற்றி
15. ஓம் ஆகுவாகன போற்றி
16. ஓம் இளம்பிறைஎயிற்ற போற்றி
17. ஓம் இலங்குநூல் மார்ப போற்றி
18. ஓம் இருள் மலம் அறுப்பாய் போற்றி
19. ஓம் உம்பர் தருவே போற்றி
20. ஓம் எண்ணியதருள்வாய் போற்றி
21. ஓம் எண்ணுதற்கரியாய் போற்றி
22. ஓம் எண்ணமர் குணத்தினாய் போற்றி
23. ஓம் என் வாழ்முதலே போற்றி
24. ஓம் ஏக தந்தத்து எந்தாய் போற்றி
25. ஓம் ஐங்கரக் கோவே போற்றி
26. ஓம் ஐம்புலக் கதவடைப்பாய் போற்றி

| | | |
|---|---|---|
| 27. | ஓம் ஓங்காரத்திரு மேனியப்பா | போற்றி |
| 28. | ஓம் ஓங்காரத் தொண்பொருளே | போற்றி |
| 29. | ஓம் ஔவைக்கருளிய அண்ணலே | போற்றி |
| 30. | ஓம் கருதுவார் கருத்திலூறு தேனே | போற்றி |
| 31. | ஓம் கடலமுதே கணநாதா | போற்றி |
| 32. | ஓம் கரிமுகக் கடவுள் | போற்றி |
| 33. | ஓம் கண்ணின் மணியேகற்பகமே | போற்றி |
| 34. | ஓம் கணேச மணியே | போற்றி |
| 35. | ஓம் கண்மூன்றுடைய கரும்பே | போற்றி |
| 36. | ஓம் கரும்பினிற் கட்டி கணபதி | போற்றி |
| 37. | ஓம் கடதடக் கும்பக்களிறே | போற்றி |
| 38. | ஓம் கற்றவர் விரும்பும்கனியே | போற்றி |
| 39. | ஓம் கயமுகஅசுரனைக்கடிந்தாண்டாய் | போற்றி |
| 40. | ஓம் கருணையின் திருவுருவே | போற்றி |
| 41. | ஓம் களியானைக்கன்றே | போற்றி |
| 42. | ஓம் கற்பக விநாயகா | போற்றி |
| 43. | ஓம் கன்னலே இன்அமுதே | போற்றி |
| 44. | ஓம் கரகநீர் கவிழ்த்தமதகரி | போற்றி |
| 45. | ஓம் காவிரி கண்டகணேசா | போற்றி |
| 46. | ஓம் கார்வண்ண மேனியனே | போற்றி |
| 47. | ஓம் காண்டற்கரியகரிமுகத்துஎன்தாய் | போற்றி |
| 48. | ஓம் குஞ்சரமுகத்து ஐங்கர | போற்றி |
| 49. | ஓம் குறைவிலாக் குணக்குன்றே | போற்றி |
| 50. | ஓம் சத்தி சிவமான அத்திமுகத்தாய் | போற்றி |
| 51. | ஓம் சித்தி முத்தி தந்தருள் | போற்றி |
| 52. | ஓம் சிந்தாமணியே சித்திவிநாயகா | போற்றி |
| 53. | ஓம் சிராப்பள்ளிக் குன்றுடையாய் | போற்றி |
| 54. | ஓம் சீர்வணம் முழுதும்நீயே | போற்றி |
| 55. | ஓம் செக்கர்மேனிக் கடவுள் | போற்றி |
| 56. | ஓம் செங்கமல பாதம் தந்தருள் | போற்றி |
| 57. | ஓம் சொற்பதங் கடந்த தொல்லோன் | போற்றி |
| 58. | ஓம் சோதி இளம்பிறைமுடியனே | போற்றி |

59. ஓம் ஞானத்திருவுருவே போற்றி
60. ஓம் ஞானவிநாயகா போற்றி
61. ஓம் தந்தை வலம்வந்ததனயா போற்றி
62. ஓம் தழைச்செவியுடையதயாபர போற்றி
63. ஓம் தாழ்தடகைப் பெரியோன் போற்றி
64. ஓம் திருவும்கல்வியும் தருவாய் போற்றி
65. ஓம் துப்பார் திருமேனியனே போற்றி
66. ஓம் துங்கக்கரிமுகத்துத் தூமணி போற்றி
67. ஓம் தொழுவார்க்கு எளியாய் போற்றி
68. ஓம் தொந்தி வயிற்றாய் போற்றி
69. ஓம் நந்திமகனே போற்றி
70. ஓம் நடனகணபதி போற்றி
71. ஓம் நச்சினார்க் கினியாய் போற்றி
72. ஓம் நண்ணினர்க் கினியாய் போற்றி
73. ஓம் நந்தாப் பழச்சுவையே போற்றி
74. ஓம் நம்பிக் கருளியநம்பி போற்றி
75. ஓம் நாரையம் பதியில்சிவக்களிறே போற்றி
76. ஓம் பணிந்தவர் பாவம்பறிப்பாய் போற்றி
77. ஓம் பற்றினார் பற்று அறுப்பாய் போற்றி
78. ஓம் பண்ணின் இசையானாய் போற்றி
79. ஓம் பாசாங்குசகரனே போற்றி
80. ஓம் பார்பதி புத்திர போற்றி
81. ஓம் பிரணவ சொருப போற்றி
82. ஓம் பிரணவப் பொருளே போற்றி
83. ஓம் பூவணத்திருவடி தொழுவோம் போற்றி
84. ஓம் பூரணத்துள் பூரணமே போற்றி
85. ஓம் பேழைவயிற்றுப் பெம்மான் போற்றி
86. ஓம் போதமும் காணாப்போதமே போற்றி
87. ஓம் மன்றுளாடி மைந்தா போற்றி
88. ஓம் மணிவண்ணன் மாமருகா போற்றி
89. ஓம் மட்டவிள்தும்மை மாலைமார்ப் போற்றி
90. ஓம் மாங்கனி மாதுளை உகப்பாய் போற்றி

| | |
|---|---|
| 91. ஓம் மோதகப்பிரியா | போற்றி |
| 92. ஓம் முன்னை முழுமுதலே | போற்றி |
| 93. ஓம் முற்கலமுனிவர்க்கு வீடருளினை | போற்றி |
| 94. ஓம் முக்குணம் கடந்த முழுமுதலே | போற்றி |
| 95. ஓம் மும்மதம் சொரியும் வாரணம் | போற்றி |
| 96. ஓம் முப்பழம் நுகரும் மூசிகவாகனா | போற்றி |
| 97. ஓம் மூவரும் அறியா முன்னோன் | போற்றி |
| 98. ஓம் மூத்தவிநாயக | போற்றி |
| 99. ஓம் மூவாயாக்கைப் பெரியோன் | போற்றி |
| 100. ஓம் யாவர்க்கும்எளியதேவே | போற்றி |
| 101. வுந்திப்பார்க் கருளும்வள்ளலே | போற்றி |
| 102. ஓம் வல்லபை மணந்தமணாளா | போற்றி |
| 103. ஓம் வானமர் தேவர்தேவே | போற்றி |
| 104. ஓம் வாரணமுகத்து வானவ | போற்றி |
| 105. ஓம் விண்ணகத்தேவர்க்கும் அரியாய் | போற்றி |
| 106. ஓம் விகடசக்கரக் கணபதி | போற்றி |
| 107. ஓம் வேத முதல்வா | போற்றி |
| 108. ஓம் வேழமுகத்து விநாயகா | போற்றி |

கற்பக விநாயகக் கடவுள் போற்றி
சிறபரமோனத் தேவன் போற்றி
வாரண முகத்தான் மலர்த்தாள் போற்றி
ஆரண முகத்தான் அருள் பதம் போற்றி

# தமிழ் அர்ச்சனை
## முருகன்

| | | |
|---|---|---|
| 1) | ஓம் அயில்வேலரசே | போற்றி |
| 2) | ஓம் அடிஅந்தமிலா ஆதி | போற்றி |
| 3) | ஓம் அமராவதிகாவல | போற்றி |
| 4) | ஓம் அருளார் அமுதே | போற்றி |
| 5) | ஓம் அந்தணர் வெறுக்கை | போற்றி |
| 6) | ஓம் அறுவர் பயந்தஆறமர்செல்வ | போற்றி |
| 7) | ஓம் ஆல்கெழு கடவுட்புதல்வ | போற்றி |
| 8) | ஓம் ஆனா அமுதே | போற்றி |
| 9) | ஓம் ஆறுமுகசாமி | போற்றி |
| 10) | ஓம் இளம்பூரண | போற்றி |
| 11) | ஓம் இசைபேராள | போற்றி |
| 12) | ஓம் ஈசன்மைந்தா | போற்றி |
| 13) | ஓம் உமைதரு பாலா | போற்றி |
| 14) | ஓம் எங்கும்நிறை பரசிவமே | போற்றி |
| 15) | ஓம் என்றும் இளையாய் | போற்றி |
| 16) | ஓம் ஏறூர்ந்தான் ஏறே | போற்றி |
| 17) | ஓம் ஏரகச்செல்வ | போற்றி |
| 18) | ஓம் ஏரம்பன்தம்பி | போற்றி |
| 19) | ஓம் ஓங்காரத்துஉள் ஒளியே | போற்றி |
| 20) | ஓம் கங்கை பெற்றோன் | போற்றி |
| 21) | ஓம் கண்ணுதல்தந்த கடவுள் | போற்றி |
| 22) | ஓம் கருணாகரனே | போற்றி |
| 23) | ஓம் கதிர்வேலவனே | போற்றி |
| 24) | ஓம் கதிர்காமவேளே | போற்றி |
| 25) | ஓம் கந்தவேளே | போற்றி |
| 26) | ஓம் கந்தகுருநாதா | போற்றி |
| 27) | ஓம் காங்கேயனே | போற்றி |

| | | |
|---|---|---|
| 28) | ஓம் கார்த்திகேயனே | போற்றி |
| 29) | ஓம் காளைக்குமரேசனே | போற்றி |
| 30) | ஓம் கிருபாகரனே | போற்றி |
| 31) | ஓம் கீதகிண்கிணி பாதா | போற்றி |
| 32) | ஓம் குன்றுதோறாடி | போற்றி |
| 33) | ஓம் குறிஞ்சிக்கிழவ | போற்றி |
| 34) | ஓம் குமரகுருபர | போற்றி |
| 35) | ஓம் குலிசாயுத | போற்றி |
| 36) | ஓம் குல மயில்வாகன | போற்றி |
| 37) | ஓம் குமாரசுவாமி | போற்றி |
| 38) | ஓம் கொற்றவைசிறுவ | போற்றி |
| 39) | ஓம் சரவணத்துதித்தாய் | போற்றி |
| 40) | ஓம் சரவணபவனே | போற்றி |
| 41) | ஓம் சம்புகுமாரா | போற்றி |
| 42) | ஓம் சங்கரதேசிக | போற்றி |
| 43) | ஓம் சண்முகத்தரசே | போற்றி |
| 44) | ஓம் சங்கப்புலவ | போற்றி |
| 45) | ஓம் சால்பெருஞ் செல்வ | போற்றி |
| 46) | ஓம் சிவைபாலா | போற்றி |
| 47) | ஓம் சிவசொருப | போற்றி |
| 48) | ஓம் சிற்பரமூர்த்தி | போற்றி |
| 49) | ஓம் சீரலைவாய்த்தேவே | போற்றி |
| 50) | ஓம் சுரலோக சிகாமணி | போற்றி |
| 51) | ஓம் சுவாமிநாதா | போற்றி |
| 52) | ஓம் சூரபயங்கர | போற்றி |
| 53) | ஓம் சூர்மார்பு தடிந்தவா | போற்றி |
| 54) | ஓம் செய்யமேனியனே | போற்றி |
| 55) | ஓம் செஞ்சுடர் வேலவனே | போற்றி |
| 56) | ஓம் செங்கோட்டு வெற்ப | போற்றி |
| 57) | ஓம் செந்தமிழ் புலவ | போற்றி |
| 58) | ஓம் செச்சைக் கண்ணியனே | போற்றி |
| 59) | ஓம் செந்தில் அரசே | போற்றி |

| | | |
|---|---|---|
| 60) | ஓம் சேவற் கொடியாய் | போற்றி |
| 61) | ஓம் சைவ மணியே | போற்றி |
| 62) | ஓம் ஞானாகரனே | போற்றி |
| 63) | ஓம் ஞானவரோதயனே | போற்றி |
| 64) | ஓம் ஞானசுகாதிபனே | போற்றி |
| 65) | ஓம் ஞானவினோத | போற்றி |
| 66) | ஓம் ஞான பண்டித | போற்றி |
| 67) | ஓம் தணிகாசல | போற்றி |
| 68) | ஓம் தண்டாயுத பாணி | போற்றி |
| 69) | ஓம் தனிவேல் முருகா | போற்றி |
| 70) | ஓம் திருப்பரங் கிரிதீரா | போற்றி |
| 71) | ஓம் திருச் செந்தூர்தேவா | போற்றி |
| 72) | ஓம் திரு ஆவிநன்குடியாய் | போற்றி |
| 73) | ஓம் தீப மங்களசோதி | போற்றி |
| 74) | ஓம் தூய அம்பலலீலா | போற்றி |
| 75) | ஓம் தேவகுஞ்சரிபாகா | போற்றி |
| 76) | ஓம் தேவசேனாபதி | போற்றி |
| 77) | ஓம் தேவர்கள் தேவே | போற்றி |
| 78) | ஓம் நண்ணினர்க் கருள்வாய் | போற்றி |
| 79) | ஓம் நச்சினர்க்கினியாய் | போற்றி |
| 80) | ஓம் நிர்மல நிராகுல | போற்றி |
| 81) | ஓம் பரஞ்சுடர் முதலே | போற்றி |
| 82) | ஓம் பன்னிருபுயத்தாய் | போற்றி |
| 83) | ஓம் பழனிமலை வாழ்வே | போற்றி |
| 84) | ஓம் பார்வதி பாலா | போற்றி |
| 85) | ஓம் பிரமனைதடிந்தாய் | போற்றி |
| 86) | ஓம் பிரணவப்பொருள் உரைத்தாய் | போற்றி |
| 87) | ஓம் பிணிக்கு மருந்தே | போற்றி |
| 88) | ஓம் பிணிமுகம் ஏறிஉகப்பாய் | போற்றி |
| 89) | ஓம் பிறவாய் இறவாய் | போற்றி |
| 90) | ஓம் பிறவா நெறிஅருள்வாய் | போற்றி |
| 91) | ஓம் பூக்குங்கடம்மா | போற்றி |

| | | |
|---|---|---|
| 92) | ஓம் பெரும் பெயர்முருகா | போற்றி |
| 93) | ஓம் போர்வேல்முருகா | போற்றி |
| 94) | ஓம் மலைமகள் மகனே | போற்றி |
| 95) | ஓம் மலைகிழவோனே | போற்றி |
| 96) | ஓம் மன்றாடி மைந்தா | போற்றி |
| 97) | ஓம் மறைநாயகனே | போற்றி |
| 98) | ஓம் மாலோன் மருகனே | போற்றி |
| 99) | ஓம் மாற்றோர் கூற்றே | போற்றி |
| 100) | ஓம் மைந்தர் ஏறே | போற்றி |
| 101) | ஓம் முத்தமிழ் முருகா | போற்றி |
| 102) | ஓம் முகமாறுடையோன் | போற்றி |
| 103) | ஓம மூவர்க்கும் முதலவா | போற்றி |
| 104) | ஓம் வள்ளிநாயகா | போற்றி |
| 105) | ஓம் வானோர்தொழுபதியே | போற்றி |
| 106) | ஓம் வெற்றிவேல் முருகா | போற்றி |

பன்னிருகரத்தாய் போற்றி பசும்பொன் மாமயிலாய் போற்றி
முன்னிய கருணை ஆறுமுகப் பரம்பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்குமாமணியே போற்றி

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

# திருமுறைகளும் சிவநெறியும்

## (சைவத் தமிழ்ச் சிறுவர்க்கு)

"ஆட்பா லவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகிலள வில்லைக் கிளக்க வேண்டா
கோட் பாலனவும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்று இவை கேட்கத் தக்கார்"
திருஞானசம்பந்தர்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடையஎடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மா நிலத்தே"
-திருநாவுக்கரசர்-

தொகுப்பு: திருமுறைக் கூட்டத்தார், விம்பிள்டன்.
வெளியீடு: அன்பு இல்லம்,
திருகோணமலை.

உ

சிவமயம்



"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடையஎடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மா நிலத்தே"

**திருநாவுக்கரசர்**

ஆலயா அச்சகம், 88/2A, கந்தசாமிகோவில் வீதி வவுனியா.